## யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
## சாவகச்சேரி

# பரிசில் நாள் அறிக்கை
# 2017

**08.05.2018**

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
சாவகச்சேரி

# 110 ஆவது ஆண்டு விழா மற்றும் பரிசில் நாள்-2017

காலம்:- 08.05.2018 செவ்வாய்க்கிழமை
நேரம்:- பிற்பகல் 2.00 மணி
இடம் :- மகாலிங்கம் அரங்கு

தலைவர்
திரு.க.உதயகுமாரன் அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர்
உயர்திரு நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள்
(அரசாங்கஅதிபர்/ மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்
திருமதி சி.நந்தகுமார் அவர்கள்
(கணக்காளர், தென்மராட்சி கல்வி வலயம்)
திரு வ.நடராஜா அவர்கள்
(கோட்டக்கல்வி அலுவலர், சாவகச்சேரி)
திரு W.M.S.B.விக்கிரமசிங்க அவர்கள்
(தலைமை பொலிஸ் அதிகாரி, சாவகச்சேரி)

கௌரவ விருந்தினர்கள்
திரு க.சரவணபவான் அவர்கள்
(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர், தென்மராட்சி கல்வி வலயம்)
திரு ந.சோமஸ்கந்தராசா அவர்கள்
(ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆங்கிலம், வடமாகாணம்)
திரு சி.நாகராசா அவர்கள்
(ஓய்வு நிலை அதிபர்)
செல்வி கு.அகிலேஸ்வரி அவர்கள்
(நிதிக்கட்டுப்பாட்டாளர், Schaupub Techink PVT Ltd)

நிகழ்வு சிறக்க தங்கள் நல்வரவைக்கண்டு உவகை அடைகின்றோம்

## பாடசாலை இலச்சினை

## மகுட வாசகம்

ஒதுவது ஒழியேல்

## தூர நோக்கு

இருபத்தோராம் நூற்றாண்டில் பொருந்தி வாழும் நற்பிரஜைகளை உருவாக்கும் நிறுவனமாகத் திகழ்தல்

## பணிக்கூற்று

தேசிய மாகாணக் கல்விக் கொள்கைகளுக்கு இசைவாக சாத்தியமான வாய்ப்புக்களை ஒருங்கிசைத்து எதிர்காலப் பொருத்தப்பாடுடைய மனித வளத்தை உருவாக்குதல்

# பாடசாலைக் கீதம்

இராகம் - சங்கராபரணம் 						தாளம் - ஏகம்

வடகீழ் நாட்டின் வளமிகு பதியென வகுத்ததென் மட்டுவிலதனில்
வள்ளல்முத்து உபாத்தியார் தந்த வனப்புறு கல்விக் கழகம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை //

ஆயிரத்தொழு தொள்ளாயிரத்தெட்டாம் ஆண்டு வைகாசி நாள் எட்டில்
அருளொளி பரப்பி நின்றறிவினை வளர்த்திட அமைத்தனன் நல்லறச்சாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை//

சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றி தகைபெற அமைத்த நற்சாலை
சாஸ்திரம் பற்பல பயிற்றிட வந்த சன்மார்க்க போதனாசாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை//

இயல் இசை நாடகம் ஆங்கிலம் யாவும் இனிதாய் வளர்துமே ஓங்க
இளஞ்சிறு மாணவர் மனத்திடை என்றும் எழில்பெறும் அணையாத்தீபம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை//

வாழ்க வாழ்க வாழ்க!
வாழ்க நீடூழி வாழ்க!

வாழ்க நீடூழி வாழ்க!

# யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

## 110 ஆவது ஆண்டு விழா மலர் வெளியீடு, ஸ்தாபகரின் உருவச்சிலை திரை நீக்கம் மற்றும் பரிசில் நாள் விழா - 2018

08.05.2018 செவ்வாய்க்கிழமை பி.ப. 2:00 மணி

நிகழ்ச்சி நிரல்

- பாரம்பரிய மங்கள வாத்திய இசையுடன் விருந்தினருக்கு மாலை அணிவித்து வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
  - ✓ தேவாரம்
  - ✓ கிறீஸ்தவ கீதம்
- தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் இசைத்தல்
- பாடசாலைக் கொடியேற்றி பாடசாலைக் கீதம் இசைத்தல்
- வித்தியாலய ஸ்தாபகர் உருவச்சிலை திரை நீக்கம் செய்து மலர்மாலை அணிவித்து விளக்கேற்றல்
- மங்கள இசை
- வரவேற்புரை – உப அதிபர் திருமதி ந.சிவநேசன்
- வரவேற்பு நடனம் - வித்தியாலய மாணவிகள்
- தலைமையுரை
- நூற்றுப்பத்தாவது ஆண்டு மலர் வெளியீடு
- நூல் வெளியீட்டு ஆய்வுரை–திரு.ச.லலீசன் (உபஅதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
- குழுப்பாடல் - வித்தியாலய மாணவிகள்
- கௌரவ விருந்தினர் உரை - திரு ந.சோமஸ்கந்தராசா
- தனி நடனம் - செல்வி சு.சுஜானா
- கௌரவ விருந்தினர் உரை - திரு சி.நாகராசா
- Role Play – Grade 09 Students
- 110 ஆவது ஆண்டு விழாவின் வரலாற்றுத் தொகுப்பு
- English Group Song - வித்தியாலய மாணவிகள்
- பரிசில் நாள் அறிக்கை – அதிபர்
- English Poem – Miss S.Vithushaliny Grade 10
- சிறப்பு விருந்தினர் உரை - திருமதி சி.நந்தகுமார்
- பேச்சு- செல்வி சி.பிரணவி தரம் 06
- சிறப்பு விருந்தினர் உரை - திரு வ.நடராஜா
- பரிசில் வழங்கல்
- சிற்பி கௌரவிக்கப்படல்
- நினைவுச்சின்னங்கள் வழங்கல்
- தனி நடனம் - செல்வி அ.அகழினி
- பிரதம விருந்தினர் உரை
- நன்றிபாராட்டல் - திரு/திருமதி கணேசலிங்கம்
- நன்றியுரை – ஆசிரியர் திருமதி கௌரி சந்திரகுமார்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- கொடியிறக்கல்

## வித்தியாலய முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை

இன்று எமது வித்தியாலயத்தின் 110ஆவது ஆண்டு விழாவிற்கும் ஸ்தாபகரின் உருவச்சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்விற்கும் மற்றும் பரிசில் நாள் நிகழ்விற்கும் எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்திரனாக வருகை தந்திருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.நாகலிங்கம் வேதநாயகன் அவர்களே!, சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளராக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற திருமதி.சிவமதி நந்தகுமார் அவர்களே! கோட்டக்கல்வி அலுவலகராக கடமையாற்றுகின்ற திரு.வ.நடராஜா அவர்களே!, தலைமைப் பொலிஸ் அதிகாரி திரு W.M.S.B.விக்கிரமசிங்க அவர்களே!, கௌரவ விருந்தினர்களாக கலந்து இவ்விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திரு.க.சரவணபவான் அவர்களே!, வடமாகாண ஆங்கிலபாட ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.ந.சோமஸ்கந்தராசா அவர்களே!, ஓய்வு நிலை அதிபர் திரு.சி.நாகராசா அவர்களே!, Schaupub Techink PVT Ltd நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளர் செல்வி.கு.அகிலேஸ்வரி அவர்களே!, ஸ்தாபகர் பரம்பரையைச் சேர்ந்த பெரியோர்களே! மாகாண சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்களே! இவ் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்திர்களே! கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே! அயற்பாடசாலைகளின் அன்பார்ந்த அதிபர்களே! முதன்மை ஆசிரியர்களே! ஓய்வு நிலை அதிபர்களே! ஆசிரியர்களே! ஓய்வுபெற்ற கல்வியியலாளர்களே! கல்வி சாரா ஊழியர்களே! பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் அவர்களே! பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே! அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களே! நலன் விரும்பிகளே! பெற்றோர்களே!, பழைய மாணவர்களே! அன்பான மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரிற்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதன்மை விருந்தினர் அவர்களே!**

தாங்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக பொறுப்பேற்ற நாளிலிருந்து அர்ப்பணிப்போடு செயலாற்றி வருவதை கல்விச் சமூகமும் ஏனையவர்களும் நன்கறிவர். கற்றவரும் மற்றவரும் அரசாங்கத்திடம் எதை எதிர்பார்க்கின்றார்களோ அதை ஆத்மார்த்தமாக உணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதில் தங்களுக்கு தாங்களே நிகராக விளங்குகிறீர்கள் என்பதனை எம் மாணவர்ச் செல்வங்களுக்கு முன் உதாரணமாக காட்ட விரும்புகின்றோம். தாங்கள் யாழ் மாவட்டத்தை பொறுப்பேற்க முன்னர் யுத்த காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் பொறுப்போடு கடமையாற்றி மக்களுக்கு அற்பணிப்போடு சேவையாற்றியமையை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்நிலையில் தங்களை பிரதம விருந்தினராக அழைத்த போது பல வேலைப்பழுக்களின் மத்தியிலும் எவ்வித மறுப்பும் இன்றி விழாவில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்தமைக்கு எமது மட்டற்ற மகிழ்ச்சியை பாடசாலை சமூகம் சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிறப்பு விருந்தினர் அவர்களே!**

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி சிவமதி நந்தகுமார் அவர்களே! தென்மராட்சி பிரதேசத்தின் மந்துவில் மேற்கு பகுதியைப் பிறப்பிடமாக கொண்டு,

யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் இடைநிலை உயர்தரக்கல்வியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் சிறப்பாக கற்று தேறி யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி அங்கு பட்டப்படிப்பை மேற்கொண்டு முகாமைத்துவ பட்டதாரியாகி(BBA) அப்பட்டத்தில் 1ம் வகுப்பு சித்திதனைப் பெற்று பெருமை சேர்த்த நுண்மதியாளரான தாங்கள் ஊர்காவற்துறை அந்தோனியார் கல்லூரியில் கணக்கியல் ஆசிரியராக பணியாற்றி தொடர்ந்து தாங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தின் யா/டிபேக்கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றி அதன் பின் பதவி உயர்வு பெற்று அதே கல்வி வலயத்திற்கு கணக்காளராக நியமனம் பெற்றமை எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. மேலும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய கோட்டக்கல்வி அலுவலர் திரு வல்லிபுரம் நடராஜா அவர்களே! தாங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணியைப் பிறப்பிடமாகவும் அதே பிரதேசப் பாடசாலையான வரணி மகா வித்தியாலயத்தில் கல்விகற்று யாழ்ப்பான பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து தென்மராட்சிப் பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றி அதிபர் போட்டிப் பரீட்சையில் அதிபர் பதவியைப் பெற்று எமது பாடசாலையில் அதிபர் முதல் நியமனத்தைப் பெற்று பின்னர் யா/கொடிகாமம் மத்திய கல்லூரியின் முதல் தர அதிபராகக் கடமையாற்றி இன்று சாவகச்சேரிக் கோட்டக் கல்வி பணிப்பாளராகக் கடமையாற்றுவது எமக்கு மட்டுமல்ல தென்மராட்சி பிரதேச மக்களின் மனங்களிலும் நிறைந்துள்ளீர்கள். தாங்கள் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது எம்மையெல்லாம் பெருமைப்படுத்துகின்றது. மேலும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் அதிகாரியாக சிறப்பான முறையில் கடமையாற்றி வரும் தலைமைப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு.W.M.S.B.விக்கிரமசிங்க அவர்களே! தாங்கள் இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்தமையை எண்ணி எமது பாடசாலை சமூகம் புளகாங்கிதம் கொள்கின்றது.

**கௌரவ விருந்தினர் அவர்களே !**

எமது பாடசாலையின் 110 ஆவது ஆண்டு விழாவிற்கும் ஸ்தாபகரின் உருவச்சிலை திரை நீக்கம் மற்றும் பரிசில் நாள் நிகழ்விற்கும் கௌரவ விருந்தினராகக் வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும், ஸ்தாபகர் பரம்பரையின் வம்சாவழி தோன்றலில் விருந்தினர்களாக கலந்து கொண்டிருக்கும் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திரு க.சரவணபவான் அவர்களே!, வடமாகாண ஆங்கிலபாட ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு ந. சோமஸ்கந்தராசா அவர்களே!, இப்பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் திரு சி.நாகராசா அவர்களே!, மற்றும் Schaupub Techink PVT Ltd நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளர் செல்வி குமாரசாமி அகிலேஸ்வரி அவர்களே!, தாங்கள் அனைவரும் இப்பாடசாலைக்கு வழங்கி வரும் உதவிகளுக்கும் ஒத்துழைப்பிற்கும் நன்றிகூறுவதுடன் தங்கள் அனைவரினதும் வருகையையிட்டு இப் பாடசாலை சமூகம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

## பாடசாலை வரலாறு

1908 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 08 ஆம் திகதி அமரர் முருகேசு முத்துதம்பி உபாத்தியாயரால் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இவ்வருடம் 110 ஆவது ஆண்டினை நிறைவு செய்து வெற்றி நடை போடுகின்றது. தென்மட்டுவில் பகுதியில் ஒழுக்க விழுமியத்துடன் சிறந்த கல்விச் சேவையை வாரி வழங்கி வரும் இப்பாடசாலை ஏழை மாணவர்களது அறிவுப்பசியை தீர்க்கும் ஆலயமாக மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை கல்வி, இணைபாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

### மாணவர் விபரம்

| பிரிவு | தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | 1-5 | 30 | 33 | 63 |
| கனிஸ்ட இடைநிலைப் பிரிவு | 6-9 | 45 | 29 | 74 |
| சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு | 10-11 | 17 | 21 | 38 |
| | | 92 | 83 | 175 |

### ஆசிரிய ஆளணி விபரம்

| | |
|---|---|
| நிரந்தர ஆசிரியர்கள் | 18 |
| பகுதி நேர் ஆசிரியர்கள் | 04 |
| கல்விசாரா ஊழியர்கள் | 03 |

### ஆசிரிய வகை

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 08 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 14 |

### எமது ஆசிரியர் குழாத்தோடு புதிதாக இணைந்தவர்கள் -2018

1. திருமதி சுதாஜினி சிவதாசன்
2. திருமதி. செல்வராணி கணேசலிங்கம்
3. திருமதி இராஜரஞ்சிதம் சந்திரசேகரம்
4. திருமதி. சாந்தநாயகி பவளகுமாரன்
5. திரு சொக்கலிங்கம் நந்தகுமார்
6. திருமதி தாரணி அரவிந்தன் (தற்காலிக இணைப்பு)

### கல்விச் செயற்பாடு

எமது பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடானது அர்ப்பணிப்பும் சேவை மனபாங்கும் மிக்க ஆசிரியர் குழாத்தினரால் எமது மாணவச் செல்வங்களிற்கு வழங்கப்படுகின்றது. அந்த வகையில் 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரீட்சையின் பெறுபேற்று விபரம் வருமாறு.

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளியைப் பெற்றோர் | 70 புள்ளிகளிற்கு மேல் பெற்றோர் | 70 புள்ளிகளிற்கு மேல் சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 2017 | 12 | 01 | 10 | 91.6% |

2017 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேற்று விபரம்

| ஆண்டு | தோற்றியோர் | சித்தி | வீதம் |
|---|---|---|---|
| 2017 | 17 | 08 | 47.05% |

இவர்களுள் செல்வி யே.ரம்சிகா, செல்வி இ.மிதிலா, செல்வி த.ஜனனி, செல்வி சி வித்தியா, செல்வி ப.அர்ச்சனா, செல்வி நா.மதுஷா, செல்வி ச.துர்க்கா, செல்வன் தி.பிருந்தன் ஆகியோர் சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரம் கற்று வருகின்றனர். இவர்களை கற்பித்து வழிகாட்டிய ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் பாராட்டுகின்றேன்.

## இணைபாடவிதான செயற்பாடுகள்

மாணவர்களிடம் தலைமைத்துவம் ஆளுமைவிருத்தி, அழகியல் உணர்வு உடல் உள ஆரோக்கியம் என்பவற்றை வளர்ப்பதில் இணைபாட விதான செயற்பாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. வருடந் தோறும் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டி, ஆங்கில தினம், தமிழ்மொழித்தினம் ஆகியவற்றில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர்.

கணித ஒலிம்பியாட் போட்டியில் தரம் 7 ஜெ.துவாரகா, தரம் 8 செ.யதுஷன், தரம் 10 ஜெ.ஜெகதீஸ்வரன் ஆகியோர் வலயமட்டத்திலும் தரம் 7 ஜெ.துவாரகா, தரம் 10 ஜெ.ஜெகதீஸ்வரன் ஆகியோர் மாகாணமட்டத்திலும் தெரிவாகி தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள், துறைசார் வளவாளர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

வலய மட்ட கணித வினாடிவினாப் போட்டியில் தரம் 10 ஜெ.ஜெகதீஸ்வரன் 2ம் இடம் பெற்று மாகாணமட்டதிதில் பங்குபற்றி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவருக்கு பயிற்றுவித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

வலயமட்ட சமூகவிஞ்ஞானப் போட்டியில் தரம் 6 ந.பானுஜன் 2ம் இடம், தரம் 7 ஜெ.துவாரகா 1ம் இடம், தரம் 9 பா.சோபினி 2ம் இடம் பெற்றதுடன் மாகாண மட்டத்தில் பங்கு பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

வலயமட்ட ஆங்கில தினப் போட்டியில் தரம் -8 ச.அபிஸ்னவி Recitation 3ம் இடம், தரம் -9 சு.விதுசாளினி Recitation 2ம் இடம் பெற்றதுடன் மாகாணமட்ட போட்டியிலும் பங்குபற்றியிருந்தனர். இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் திரு. சி. பகீரதன் அவர்களைப் பாராட்டுகின்றேன்

வலயமட்ட மெய்வல்லுநர் போட்டியில்

| | | | |
|---|---|---|---|
| தரம் 8 | செல்வன் செ.யதுஷன் | நீளம் பாய்தல் | 1ம் இடம் |
| தரம் 8 | செல்வி த.தர்மிகா | 100m ஓட்டம் | 1ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| தரம் 8 | செல்வி ம.ஷாகிதா | உயரம் பாய்தல் | 3ம் இடம் |
| தரம் 9 | செல்வி சு.விதுசாளினி | 100m ஓட்டம் | 3ம் இடம் |
| தரம் 10 | செல்வி ஞா.லோஜினி | 400m ஓட்டம் | 2ம் இடம் |
| 16 வயதுப் பெண்கள் | 4×100m அஞ்சல் | 3ம் இடம் | |

இவர்களுக்குப் பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியை திருமதி. நிரஞ்சினி. யோகசீலன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**கிடைக்கப் பெற்றவளங்கள்**

விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்களான நடமாடும் ஆய்வுகூடத் தொகுதி (Mobile Kits) தென்மராட்சி கல்வி வலயத்தினுடாக மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. இவ்அனுசரனையை வழங்கிய அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றி கூறுகின்றேன்.

மாணவர் மன்றச் செயற்பாடுகள்

மாணவர்களின் சுய ஆற்றலை வெளிக்கொணரச் செய்வதற்கும் தனி ஆளுமை விருத்திக்காகவும் பின்வரும் கழகங்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியர்களின் வழி நடத்தலுடன் சிறப்பாக நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- மாணவர் பாராளுமன்றம்
- தமிழ் மன்றம்
- ஆங்கில மன்றம்
- இந்துமா மன்றம்
- கிறீஸ்தவ மன்றம்
- சுற்றாடல் கழகம்
- சுகாதார கழகம்
- சமூக விஞ்ஞான மன்றம்
- அழகியல் மன்றம்

போன்ற மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. மாணவர் பாராளுமன்ற இந்து கலாச்சார அமைச்சுடன் இந்துமாமன்றமும் மற்றும் கிறிஸ்தவ மன்றமும் இணைந்து தைப்பொங்கல் விழா, சித்திரை புதுவருடக் கொண்டாட்டம், குரு பூசைதினம், ஆடிப்பிறப்பு, நவராத்திரிவிழா, ஒளிவிழா முதலிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. குருபூசை தினம் கொண்டாடுவதற்கு வருடம் தோறும் எமது பாடசாலை பழைய மாணவி திருமதி. அஜித்தா ராஜ் (லண்டன்) அவர்கள் ரூபா 20,000.00 தந்துதவியுள்ளார். அவருக்கும் எமது பாடசாலை சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கணணி வள நிலையம்**

உலக மயமாக்கலின் விளைவாக நவீன தொழில் நுட்ப ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கில் எமது பாடசாலையில் மிகச் சிறப்பான முறையில் 15 கணணிகளுடன் செயற்பட்டு வருகின்றது. பொறுப்பாசிரியர் திரு.செ.றெ. இரஞ்சிதராஜ் அவர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் இயங்கிக் கொண்டு வருகின்றது. இச் செயற்பாட்டில் தற்பொழுது புதிதாக ஆசிரிய குழாமில்

இணைந்து கொண்ட திருமதி தா.அரவிந்தன் அவர்கள் இணைந்து செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்று வருகின்ற சூழ் நிலையும் காணப்படுவதுடன் பாடசாலைக்கு என்ற www.mssarasawathy.sch.lk என்ற இணையத்தளமும் School1003021@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரியையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

**பாடசாலை நூலகம் ( கற்றல் வள நிலையம்)**

பாடசாலை நூலகத்திற்கு என்று தனியான கட்டடம் இல்லாத போதிலும் வகுப்பறை ஒன்றை நூலகமாக மாற்றி மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை விருத்தி செய்வதோடு அவர்களின் அறிவுத் தேடலையும் பூர்த்தி செய்து வருகின்றது. ஏறக்குறைய 1000 புத்தகங்கள் வரை கொண்டுள்ள நூலகமானது பத்திரிகைகள், சஞ்சிகைகள், பரீட்சை வழிகாட்டிகள், கடந்த கால பரீட்சை வினாத் தொகுதிகள் என்பவற்றை தாங்கி நிற்கின்றன.

**ஆங்கில செயற்பாட்டு அறை**

ஆங்கில பாடத்திற்கென தனியான வசதிகளுடன் கூடிய செயற்பாட்டு அறை வகுப்பறை ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது. நவீன கற்பித்தல் சாதன பயன்பாட்டு மூலம் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற அதே வேளை மாணவர்கள் பல போட்டிகளிலும் பங்கு பற்றி சான்றிதழ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கற்றல் வள நிலையத்தின் ஆசிரியர் திரு. சி.பகீரதன் அவர்கள் சிறப்பாக செயற்படுத்தி வந்தார். இவர் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆங்கில பாடத்திற்கான போதனா ஆசிரியர் குழாமில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது புதிதாக ஆசிரிய குழாமில் இணைந்து கொண்ட திரு சொ. நந்தகுமார் அவர்கள் பொறுப்பேற்று நடாத்திக் கொண்டு இருக்கின்றார்.

**விஞ்ஞான ஆய்வு கூட அறை**

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தரம் 2 பாடசாலைகளில் முதன்மை பெறும் பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்று. அந்த வகையில் விஞ்ஞான ஆய்வு கூட கட்டடம் இல்லாத போதிலும் முழுமையாக மூடி அடைக்கப்படாத வகுப்பறை ஒன்றில் விஞ்ஞான பாட செயன்முறை விரிவாக்கம் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் போன்றன இடம்பெற்று வருகின்றன. அத்துடன் நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் கற்பித்தலை இணைத்து செயற்படுத்த விஞ்ஞான ஆய்வு கூடம், நடமாடும் விஞ்ஞான ஆய்வு கூடத் தொகுதி ஒன்றையும் இணைத்து செயற்படுத்தி வருகின்றது. இவ் வித்தியாலயத்திற்கு முறையான விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை அமைப்பதுடன் பல்நோக்கு காட்சி கூடம் ஒன்றை அமைப்பதன் ஊடாக ( Multi Media Room) விஞ்ஞானத்துறை மற்றும் ஏனைய பாட கற்றலை விருத்தி செய்வதற்கு ஏதுவாக அமையும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

மாணவர் சேமிப்பு கணக்கு

இவ் வித்தியாலயத்தின் மாணவர்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்த வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மாணவர்கள் பரீட்சையில் வெற்றி பெறும் மாணவர்களிற்கு பரிசில் தொகை அதிகரிப்பும் கிடைக்கப்பெற்று வருகிறது. இவ்விடத்தில் வங்கியாளர்களின் சேவைகளை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மாணவர் சுரக்ஷா காப்புறுதி திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் இலங்கை மத்திய கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றது. அதன் செயற்பாடுகள் உரிய நேரத்தில் உடனுக்குடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மெல்லக் கற்கும் மாணவர்களிற்கான செயற்திட்டம்

பாடரீதியில் அடைவு குறைந்த மாணவர்களிற்கான பாடத் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு மேலதிக நேர அட்டவணை வழங்கி பாட மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் அர்ப்பணிப்போடு செயற்படும் ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

விசேட கற்றல் செயற்திட்டம்

பொது பரீட்சையை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் விளைதிறனை மேம்படுத்த மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இச் செயற்திட்டத்தில் தம்மை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்தி வருகின்ற ஆசிரியர்களையும் கல்வி சாரா ஊழியர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்.

சத்துணவு திட்டம்

உலக உணவுத்திட்டத்தின் கீழ் இயங்கி வந்த இத்திட்டமானது உலக உணவுத்திட்ட அதிகாரிகள், கோட்ட வலயக் கல்வித் திட்ட அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வந்தது. இத்திட்டத்தை இயக்கி வந்த பாடசாலை உணவுக் குழு சிறப்பான முறையில் செயற்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது உலக உணவுச் செயற்றிட்டம் 2018 ஆண்டின் முதலாம் தவணையுடன் நிறுத்தப்பட்டுள்ளது. தரம் 01-05 வரையான ஆரம்பக்கல்வி மாணவாகளுக்கு மத்திய கல்வி அமைச்சின் அனுசரணையில் மாணவர் போசாக்குத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு பால் பழம் முட்டை பாற்சோறு சாதம் கடலை போன்ற சத்துணவு வகைகள் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றது.

ஆசிரியர் சகோரத்துவம்

பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் குடும்பமாக பணியாற்றுவதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலையின் முகாமைத்துவக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் சகோதரத்துவ ஆசிரியர்களின் நலன்களை கவனிப்பதிலும் இடமாற்றும் பெறும் மற்றும் சாதனை படைக்கும் ஆசிரியர்களை கௌரவிப்பதிலும் பெருமை அடைகின்றது. அத்துடன் ஆசிரிய சகோதரத்துவத்தின் அனைத்து நலன்களிலும் தம்மை அர்பணிப்போடு நடந்து வருகின்றனர்.

பாடசாலை அபிவிருத்திக் குழு

இப் பாடசாலை சமூகத்தின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் வலய உறுப்பினர்களை உள்ளடக்கி அதிபரின் தலைமையில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்நாள் பரிசில் நாளை சிறந்த முறையில் நடாத்துவதற்கு தங்களாலான உதவிகளைச் செய்து தந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் பௌதிக, கற்றல் வள விருத்தி தேவைகள்

- ❖ ஆரம்ப பிரிவு மாணவர்கள் சுயமாக தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு செயற்பாட்டறை.
- ❖ வீடியோ ஓடியோ மல்ரி மீடியா நிலையம்
- ❖ நூல் நிலையம் (கற்றல் வள நிலையம்)
- ❖ பாடசாலையின் பாதுகாப்பின் பொருட்டு சுற்று மதில்
- ❖ கவின்நிலையுடன் கூடிய அலுவலக அறை
- ❖ விஞ்ஞான ஆய்வு கூடம்
- ❖ விவசாய விஞ்ஞான மற்றும் மனைப்பொருளியல் கூடம்
- ❖ சங்கீத, நடன அறைகள்
- ❖ Sports Room, First Aid Room
- ❖ நவீன வசதிகளுடன் ஆசிரியர், மாணவர்களுக்கான மலசலகூட வசதி
- ❖ விளையாட்டு உபகரணத் தொகுதி

ஆசிரியர் தேவை

- ➢ ICT கற்பிப்பதற்கு நிரந்தர ஆசிரியர் தேவை
- ➢ இரண்டம் மொழி சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர் தேவை.
- ➢ ஆரம்பப் பிரிவு ஆங்கில ஆசிரியர் தேவை.
- ➢ உடற்கல்வி சுகாதாரம் கற்பிக்க முழுநேர ஆசிரியர் தேவை

கற்றல் நிதி உதவிகள்

- ➢ வடக்கு கிழக்கு மாகாண ஓய்வுநிலை ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி குமாரசாமி ஞானேஸ்வரி அவர்கள் தவணை

ஒன்றுக்கு ரூபா.5000 வீதம் ரூபா.15000 எமது மாணவச் செல்வங்களுக்கு தந்துதவுகிறார்.

- திரு.சிவலிங்கம் சிவநேசன் அவர்கள் 2017ஆம் ஆண்டின் பரிசில் வழங்கல் நிகழ்விற்காக ரூபா 50000.00 பாடசாலை அபிவிருத்தி சங்கக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார்.
- Schaupub Techink PVT Ltd நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளர் செல்வி குமாரசாமி அகிலேஸ்வரி வருடம் தோறும் பரிசில் விழாவிற்காக ரூபா 15000 வழங்கிவருகின்றார்.
- மட்டுவில் கனடாநலன்புரிச் சங்கத்தினர் வருடாந்தம் ரூபா.5000 வீதம் நான்கு மாணவர்களுக்கு வழங்கிவருகின்றனர்.
- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் மூன்று மாணவர்களுக்கு ரூபா 2000.00 வீதம் கற்றல் நிதிவழங்கியுள்ளனர்.
- திரு.ப.நீலகண்டன் அவர்கள் (கனடா) 8 மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கியுள்ளார்.
- பாதுகாப்புப் படையினர் 40 மாணவர்களிற்கு கற்றல் உபகரணம் வழங்கியுள்ளனர்.
- அமரர் செல்லத்துரை இராசம்மா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் சார்பாக திரு செ.இந்திநாதன் வழங்கும் நன்கொடை முதன்மை மாணவர் 11 பேருக்கு ரூபா 11000.00 பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவருக்கும் எமதுபாடசாலை சமூகம் சார்பாக நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் இவ்வாறான உதவிகளை வழங்கி வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாணவர் புலமைப் பரிசில் நிதியம்

- அமரர் திரு. நல்லையா அவர்களின் ஞாபகார்த்த புலமைப் பரிசு

க.பொ.த. (சா.த) 2017 பரீட்சையில் சித்தி பெற்ற முதன்மை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

1. செல்வி யே.ரம்சிகா 7A,1B,1C
2. செல்வி இ.மிதிலா 5A,1B,2C,1C
3. செல்வி த.ஜனனி 4A,3B,1C,1S
4. செல்வி சி.வித்தியா 3A,3C,2S
5. செல்வி ப.அர்ச்சனா 3A,1B,2C,2S

- அமரர் திருமதி. சந்திரா சிவகுருநாதன் புலமைப் பரிசு

க.பொ.த. (சா.த) 2017 பரீட்சையில் செல்வி யே.ரம்சிகா 7A,1B,1C முதன்மைப் பெறுபேறு பெற்றமைக்காக வழங்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

- திரு. திருமதி. நாகராஜா புலமைப் பரிசு (2017 தமிழ் மொழித் தினம்)

தரம் 7 வ.சஞ்சய் பிரிவு II பேச்சு கோட்டமட்டத்தில் தெரிவாகி வலய மட்டத்தில் பங்குபற்றியமைக்காக வழங்கப்படுகின்றது.

வளத் தேவைகள்

மேற்குறித்த வளங்களோடு இயங்கிவரும் பாடசாலையில் கீழ்வரும் வளங்களை கொண்டிராமை குறிப்பிடத்தக்கது. விஞ்ஞான ஆய்வுகூடம், இலத்திரனியல் கற்கை அலகு, செயற்பாட்டறை, விளையாட்டுச் செயற்பாட்டறை, நடன அறை, விவசாய விஞ்ஞான அலகு, மனைப்பொருளியல் கூடம் போன்ற கூடங்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கற்றல் வளநிலையம், அதிபர் அலுவலகம் இயங்கிவரும் கட்டடம் அத்திபாரப் பகுதி பாரிய சேதத்திற்குட்பட்டமையால் அவ்வலகுகளையும் நெறிப்படுத்துவதில் பேரிடஞ்சல் ஏற்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் மேல் மாடியிலுள்ள வகுப்பறைகள் கட்டடத் திணைக்கழத்தினரின் ஆலோசனைப்படி இயங்காது மூடப்பட்டுள்ளன.

மேற்படி விடயங்களை சீர்செய்யும் நோக்கில் அவசரமான அலகுகளையும் இயங்கக்கூடிய வகையில் முழு அளவிலான மாடிக்கட்டடம் ஒன்று அமைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. பாடசாலையை அனைவரும் விரும்பும் பாடசாலையாக மாற்ற கவின் நிலைப்படுத்த நுழைவாயில் முகப்பு அமைத்தல், சுற்று மதில் அமைத்தல், மற்றும் அலங்காரக் கற்கள் கொண்டு பூங்தோட்டம் அமைத்து அழகுபடுத்தவேண்டும்.

மேலும் சிறுவர் விளையாடி மகிழ சிறுவர் விளையாட்டு முற்றம் ஒன்றையும் அமைக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.

மேற்குறித்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு பாடசாலை காணியின் விஸ்தீரணம் போதாமையால் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.

பாடசாலையின் விளையாட்டு மைதானம் விஸ்தீரணம் போதாமையால் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

## நன்றியுரை

பல்வேறு வேலைப் பழுக்களின் மத்தியிலும் எமது அன்பான அழைப்பையேற்று முதன்மை விருந்தினராக வந்திருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு நாகலிங்கம் வேதநாயகன் அவர்களே! தாங்கள் எமது 110ஆவது ஆண்டு விழாவிற்கும் ஸ்தாபகரின் உருவச்சிலை திரை நீக்கம் செய்வதற்கும் பரிசில் நாள் நிகழ்வில் மாணவச் செல்வங்களிற்கு பரிசில்களை வழங்கி, கலை நிகழ்வையும் கண்டுகளித்து, இன்றைய உரையை நிகழ்த்த வந்திருக்கின்றமைக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளராக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற திருமதி.சிவமதி நந்தகுமார் அவர்களே! கோட்டக்கல்வி அலுவலகராக கடமையாற்றும் திரு.வ.நடராஜா அவர்களே!, தலைமைப் பொலிஸ் அதிகாரி திரு W.M.S.B.விக்கிரமசிங்க அவர்களே!, எமது அழைப்பை முழு மனதுடன் ஏற்று வருகை தந்து சிறப்புவிருந்தினர் உரையாற்ற முன்வந்தமைக்காக எனது மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கௌரவ விருந்தினர்களாக கலந்து இவ்விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் திரு.க.சரவணபவான் அவர்களே!, வடமாகாண ஆங்கிலபாட ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.ந.சோமஸ்கந்தராசா அவர்களே!, ஓய்வு நிலை அதிபர் திரு.சி.நாகராசா அவர்களே! Schaupub Techink PVT Ltd நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளர் செல்வி.கு.அகிலேஸ்வரி அவர்களே! எமது அழைப்பை முழு மனதுடன் ஏற்று வருகை தந்து கௌரவ விருந்தினர் உரையாற்ற முன்வந்தமைக்காக எனது மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இன்றைய பரிசில் நிகழ்வில் கலந்து சிப்பித்துக் கொண்டிருக்கின்ற ஸ்தாபகர் பரம்பரையைச் சேர்ந்த பெரியோர்களே! மாகாண சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்களே! இவ் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்திர்களே! கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே! அயற்பாடசாலைகளின் அன்பார்ந்த அதிபர்களே! முதன்மை ஆசிரியர்களே! ஓய்வு நிலை அதிபர்களே! ஆசிரியர்களே! ஓய்வுபெற்ற கல்வியியலாளர்களே! கல்வி சாரா ஊழியர்களே! பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் அவர்களே! பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே! அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களே! நலன் விரும்பிகளே! பெற்றோர்களே!, பழைய மாணவர்களே! அன்பான மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

இந் நிகழ்வு நிறைவானதாக அமைய நிதியுதவி வழங்கிய ஸ்தாபகர் வம்சா வழியினர், பெற்றோர்கள், புலம் பெயர் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மட்டுவில் தெற்கு வாழ் மக்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ் 110 ஆவது ஆண்டு நூல் வெளியீட்டு விழாவும் ஸ்தாபகரின் உருவச்சிலை திரை நீக்கம் மற்றும் பரிசில் நாள் விழாவும் சிறப்புற நடைபெற முழுமனத்துடன் தம்மை அர்பணித்து என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஆளணியினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர் பாராளுமன்ற அமைச்சர்கள், மாணவர் தலைவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மனமுவந்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் 110 ஆவது ஆண்டு நூல் வெளியீட்டு விழாவில் நூல் ஆய்வுரையை நிகழ்த்திய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உப அதிபர் திரு ச.லலீசன் அவர்களுக்கு எனது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக இவ் விழாக்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெற அர்பணிப்புடன் உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது சிரம் தாழ்த்திய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
சாவகச்சேரி
08.05.2018

க.உதயகுமாரன்
அதிபர்

## ஆளணி விபரம் - 2017

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.க.உதயகுமாரன் | SLPS 1 | பயிற்றப்பட்ட விவசாயம் |
| 2 | திரு.பொ.இராயேந்திரா | SLTS I | பயிற்றப்பட்ட சித்திரம் |
| 3 | திரு.சி.சிவானந்தன் | SLTS 2 I | கலைப்பட்டதாரி |
| 4 | திரு.ஞா.இன்பகரன் | SLTS 2 II | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் |
| 5 | திரு.சி.பகீரதன் | SLTS 2 II | தேசிய கற்பித்தல் டிப்ளோமா (ஆங்கிலம்) |
| 6 | திரு.ஐ.தெய்வேந்திரன் | SLTS 2 II | பயிற்றப்பட்ட விவசாயம் |
| 7 | திரு. சு. குகதாசன் | SLTS 2 II | வர்த்தகப் பட்டதாரி |
| 8 | திரு.எஸ்.ஆர்.ரஞ்சிதராஜ் | SLTS 3 I | கலைப்பட்டதாரி |
| 9 | திருமதி.ந.சிவநேசன் | SLTS I | கலைப்பட்டதாரி |
| 10 | திருமதி.இராஜகுலேந்திரன் | SLTS I | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 11 | செல்வி.சி.கந்தசாமி | SLTS I | பயிற்றப்பட்ட மனைப் பொருளியல் |
| 12 | திருமதி.உ.பாலசுந்தரம் | SLTS I | பயிற்றப்பட்ட கணிதம் |
| 13 | திருமதி.கெள.சந்திரகுமார் | SLTS I | கலைப்பட்டதாரி |
| 14 | திருமதி.ஜெ.முகில்வண்ணன் | SLTS 2 I | கலைப்பட்டதாரி |
| 15 | திருமதி.ற.பாஸ்கரன் | SLTS 2 II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 16 | திருமதி.ஆ.பிறின்ஸ் | SLTS 2 II | நுண்கலைப் பட்டதாரி |
| 17 | திருமதி.தே. பேரின்பன் | SLTS 2 II | தேசிய கற்பித்தல் டிப்ளோமா |
| 18 | திருமதி.ச.சுதர்சன் | SLTS 3 II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 19 | திருமதி.நி. யோகசீலன் | SLTS 3 II | உடற்கல்வி டிப்ளோமா |
| 20 | செல்வி கு மைதிலி | SLTS 3 I | தேசிய கற்பித்தல் டிப்ளோமா |
| 21 | திருமதி ந. றதீஸ் | SLTS 2 II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 22 | திருமதி ய.சிவபாதசக்தி | SLTS I | நுண்கலைப்பட்டதாரி |

## 2018 கல்வியாண்டில் பரிசில் பெறும் மாணவர் விபரம்

| தரம் 1 | | |
|---|---|---|
| இல | மாணவர் பெயர் | பரிசில் பெறும் பாடங்கள் |
| 01 | ந.ருஜிந்தன் | பொதுத்தேர்ச்சி |
| 02 | நி.ஆகாஷ் | பொதுத்தேர்ச்சி |
| 03 | த.கிரிசாந் | பொதுத்தேர்ச்சி |
| 04 | ப.பவிசன் | பொதுத்தேர்ச்சி |
| 05 | தீ.ஷயானன் | பொதுத்தேர்ச்சி |
| 06 | அ.அகலினி | பொதுத்தேர்ச்சி |
| 07 | மு.மாணஷா | பொதுத்தேர்ச்சி |
| 08 | ர.ரஷ்மியா | பொதுத்தேர்ச்சி |

## 2017 கல்வியாண்டில் பரிசில் பெறும் மாணவர் விபரம்

| தரம் 1 | | |
|---|---|---|
| இல | மாணவர் பெயர் | பரிசில் பெறும் பாடங்கள் |
| 01 | சி.தேனுஜன் | பொதுத்தேர்ச்சி |
| 02 | வ.டனுசாந் | பொதுத்தேர்ச்சி |
| 03 | மோ.சந்தோஸ் | பொதுத்தேர்ச்சி |
| 04 | சி.சந்தோஷ் | பொதுத்தேர்ச்சி |
| 05 | பா.டனிஷன் | பொதுத்தேர்ச்சி |
| 06 | கு.சஞ்ஜய் | பொதுத்தேர்ச்சி |
| 07 | பு.சம்சியா | பொதுத்தேர்ச்சி |
| 08 | த.விஸ்ணவி | பொதுத்தேர்ச்சி |
| 09 | சி.லஜிதா | பொதுத்தேர்ச்சி |
| 10 | தீ.டிசானா | பொதுத்தேர்ச்சி |
| 11 | ஜீ.அமிஸ்கா | பொதுத்தேர்ச்சி |
| 12 | சு.ஷானுஜா | பொதுத்தேர்ச்சி |
| தரம் 2 | | |
| 01 | ச.விமல்ராஜ் | பொதுத்தேர்ச்சி |
| 02 | கி.சனுசன் | பொதுத்தேர்ச்சி |
| 03 | ஜெ.திலக்சன் | பொதுத்தேர்ச்சி |
| 04 | த.அபினாஸ் | பொதுத்தேர்ச்சி |
| 05 | த.அரவிந் | பொதுத்தேர்ச்சி |
| 06 | இ.கர்பிகன் | பொதுத்தேர்ச்சி |
| 07 | கே.திலக்சன் | பொதுத்தேர்ச்சி |
| 08 | றோ.மதுசன் | பொதுத்தேர்ச்சி |
| 09 | து.மிதுசன் | பொதுத்தேர்ச்சி |
| 10 | உ.அமிஸ்ரன் | பொதுத்தேர்ச்சி |
| 11 | சு.வேனுஜா | பொதுத்தேர்ச்சி |
| 12 | ஜெ.மதுஷா | பொதுத்தேர்ச்சி |
| 13 | தி.தனுஸ்கா | பொதுத்தேர்ச்சி |
| 14 | சி.அம்ஷவி | பொதுத்தேர்ச்சி |
| 15 | ஹ.கபின்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 16 | மோ.லஸ்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 17 | உ.நிசாரா | பொதுத்தேர்ச்சி |
| தரம் 3 | | |
| 01 | ச.துஸ்மிதன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 02 | பா.நிருத்திகன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 03 | பு.யாமினி | தமிழ், சமய்ம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 04 | சா.டிரம்சிகா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |

| | | |
|---|---|---|
| 05 | நி.நிதர்சனா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 06 | ம.கவிதாஸ் | கணிதம் |
| **தரம் 4** | | |
| 01 | சி.அபர்னா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 02 | இ.கீர்த்தனா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 03 | பா.சாருஜன் | தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 04 | அ.அபிலன் | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 05 | ர.கஜலக்சிகா | தமிழ், சமயம் |
| **தரம் 5** | | |
| 01 | பி.பிரஷா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 02 | சி.பிரணவி | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 03 | தீ.சீராளன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 04 | சி.சிஷாந்தன் | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 05 | த.ஷர்னிகா | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 06 | ம.ஷாளினி | தமிழ், சமயம், சுற்றாடல் |
| 07 | ம.கனிஸ்ரன் | தமிழ், சுற்றாடல் |
| 08 | து.சங்கவி | தமிழ், சுற்றாடல் |
| 09 | பு.சர்மிகா | தமிழ் |
| 10 | சி.அபிநயா | தமிழ் |
| **தரம் 6** | | |
| 01 | ந.பானுஜன் | சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, அழகியல், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 02 | து.டானுசா | சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, அழகியல், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 03 | அ.நற்குமரன் | சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, அழகியல், பொதுத்தேர்ச்சி |
| 04 | ஞா.லோசனன் | கணிதம் |
| **தரம் 7** | | |
| 01 | வ.சன்ஜய் | தமிழ், ஆங்கிலம், சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, PTS, சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 02 | ஜெ.துவாரகன் | தமிழ், ஆங்கிலம், சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, PTS, சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 03 | ஜெ.துவாரகா | தமிழ், ஆங்கிலம், சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, PTS, சித்திரம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 04 | சி.சுவேதா | தமிழ், சமயம், விஞ்ஞானம், குடியுரிமை, PTS, சங்கீதம், சுகாதாரம் |
| 05 | ர.நிவேதிகா | தமிழ், குடியுரிமை, PTS, சங்கீதம், |
| 06 | து.கவிப்பிரியா | குடியுரிமை, PTS, சங்கீதம் |
| 07 | ர.சுடரோன் | விஞ்ஞானம், குடியுரிமை |
| 08 | சி.தருணிகா | குடியுரிமை, நடனம் |
| 09 | து.பிரின்சியா | குடியுரிமை, நடனம் |
| **தரம் 8** | | |
| 01 | பா.லினோஜன் | தமிழ், ஆங்கிலம், சைவநெறி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 02 | ச.அபிஸ்ணவி | தமிழ், ஆங்கிலம், சைவநெறி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, நடனம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 03 | செ.யதுஷன் | தமிழ், சைவநெறி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 04 | தி.சயந்தா | தமிழ், சைவநெறி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 05 | மோ.ஜெனுசன் | கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியியல், PTS, சங்கீதம், சுகாதாரம் |

| | | |
|---|---|---|
| 06 | பா.சூரியா | தமிழ், விஞ்ஞானம், புவியியல், குடியியல், PTS, சங்கீதம், சுகாதாரம் |
| 07 | த.தர்மிகா | குடியியல், நடனம் |
| 08 | செ.மதிவாணன் | குடியியல் |
| 09 | ம.ஷாகிதா | நடனம் |
| | **தரம் 9** | |
| 01 | பா.சோபினி | தமிழ், ஆங்கிலம், சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், PTS, சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 02 | வீ.மதுர்ஷன் | தமிழ், சமயம், கணிதம், சங்கீதம், சுகாதாரம். |
| 03 | ச்அபிவிஸ்னு | தமிழ், சமயம், புவியியல், சித்திரம். |
| 04 | லா.லக்ஷன் | தமிழ், புவியியல், சுகாதாரம் |
| 05 | யே.ஜெனினா | தமிழ், நடனம் |
| 06 | பா.வைஸ்ணவி | தமிழ், நடனம் |
| 07 | பா.புவிதன் | தமிழ் |
| 08 | றோ.கம்சிகா | நடனம் |
| | **தரம் 10** | |
| 01 | ஜெ.ஜெகதீஸ்வரன் | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், சங்கீதம், சுகாதாரம், பொதுத்தேர்ச்சி |
| 02 | ந.மதுமிகா | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், சங்கீதம், குடியியல் |
| 03 | பா.இலக்ஷன் | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், வர்த்தகம் |
| 04 | ச.சஞ்சியா | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், நடனம் |
| 05 | செ.தர்சிகன் | சைவசமயம் |
| 06 | ஞா.லோஜினி | சைவசமயம் |
| | **தரம் 11** | |
| 01 | யே.ரம்சிகா | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், நடனம் |
| 02 | இ.மிதிலா | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், கணிதம், குடியியல், மனைப்பொருளியல், நடனம் |
| 03 | த.ஜனனி | சைவசமயம், தமிழ் மொழியும் இலக்கியமும், குடியியல், சங்கீதம், தகவல் தொழில்நுட்பம் |
| 04 | ப.அர்ச்சனா | தமிழ் மொழியும் இலக்கியமும், சங்கீதம் |
| 05 | வி.தேனிலவன் | விவசாயம் |

## இணைபாடவிதான செயற்பாடுகள்-2017

1. கணித ஒலிம்பியாட் போட்டி
   - ❖ வலயமட்டத்தில் தெரிவாகி மாகாணமட்டத்தில் பங்குபற்றியமை
     தரம் 8 செ.யதுஷன்
   - ❖ வலயமட்டத்தில் தெரிவாகி மாகாணமட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியமை
     தரம் 7 ஜெ.துவாரகா
     தரம் 10 ஜெ.ஜெகதீஸ்வரன்
2. கணித வினாடிவினாப் போட்டி
   தரம் 10 ஜெ.ஜெகதீஸ்வரன் - வலய மட்டத்தில் 2ம் இடம் பெற்று மாகாணமட்டதிதில் பங்குபற்றியமை
3. சமூகவிஞ்ஞானப் போட்டி –வலயமட்டம்
   தரம் 6 ந.பானுஜன் 2ம் இடம்
   தரம் 7 ஜெ.துவாரகா 1ம் இடம்
   தரம் 9 பா.சோபினி 2ம் இடம்
4. Zonal Level English Day Competition- 2017
   Ms.S.Abishnavi Grade – 8 Recitation 3rd Place
   Ms.S.Vithushalini Grade -9 Recitation 2nd place

5. விளையாட்டுப்போட்டி வலயமட்டம் - 2017

| | | | |
|---|---|---|---|
| தரம் 8 | செல்வன் செ.யதுஷன் | நீளம் பாய்தல் | 1ம் இடம் |
| தரம் 8 | செல்வி த.தா்மிகா | 100m ஓட்டம் | 1ம் இடம் |
| தரம் 8 | செல்வி ம.ஷாகிதா | உயரம் பாய்தல் | 3ம் இடம் |
| தரம் 9 | செல்வி சு.விதுசாளினி | 100m ஓட்டம் | 3ம் இடம் |
| தரம் 10 | செல்வி ஞா.லோஜினி | 400m ஓட்டம் | 2ம் இடம் |

16 வயதுப் பெண்கள் 4×100m அஞ்சல் 3ம் இடம்
செல்வி சு.விதுசாளினி
செல்வி ஞா.லோஜினி
செல்வி கு.கீர்த்திகா
செல்வி பி.பிரதியுசா

6. கற்றல் வள நிலையப் போட்டி

ஆரம்பப் பிரிவு

| | | |
|---|---|---|
| தரம் 2 | றோ.மதுசன் | சித்திரம் |
| தரம் 2 | க.கபின்சிகா | கதை கூறல் |
| தரம் 4 | ர.கஜலக்சிகா | வாசிப்பு |
| தரம் 4 | இ.கீர்த்தனா | கதை கூறல் |
| தரம் 3 | பு.யாமினி | சித்திரம் |
| தரம் 5 | சி.பிரணவி | கட்டுரை |
| தரம் 5 | ம.சாளினி | வாசிப்பு |
| தரம் 5 | த.கா்ணிகா | சித்திரம் |

இடைநிலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| தரம் 7 | ஜெ.துவாரகா | கட்டுரை |
| தரம் 7 | ர.நிவேதிகா | கழிவுப் பொருள் ஆக்கம் |
| தரம் 6 | ந.பானுஜன் | சித்திரம் |
| தரம் 9 | பா.சோபினி | கட்டுரை |
| தரம் 9 | சு.விதுசாளினி | கவிதை |
| தரம் 9 | ச.அபிவிஸ்னு | சித்திரம் |
| தரம் 8 | ச.அபிஸ்ணவி | கழிவுப் பொருள் ஆக்கம் |
| தரம் 11 | த.ஜனனி | சிறுகதை |
| தரம் 8 | ந.பதுமிகா | கவிதை |
| தரம் 8 | கி.விதுசன் | சுவரொட்டி |

7. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை -2017

- வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளியைப் பெற்று சித்தியடைந்தவர்
  செல்வி சி.பிரணவி
- 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்
  1. பி.பிரஷா
  2. தீ.சீராளன்
  3. சி.சிஷாந்தன்
  4. ம.கனிஸ்ரன்
  5. ம.ஷாளினி
  6. த.ஷா்னிகா
  7. பு.சா்மிகா
  8. சி.அபிநயா
  9. சு.சுஜானா
  10. து.சங்கவி

8. 2017 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர தரப்பரீட்சையில் சித்தி பெற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | செல்வி யே.ரம்சிகா | 7A,1B,1C |
| 2. | செல்வி இ.மிதிலா | 5A,1B,2C,1S |
| 3. | செல்வி த.ஜனனி | 4A,3B,1C,1S |
| 4. | செல்வி சி.வித்தியா | 3A,3C,2S |

5. செல்வி ப.அர்ச்சனா 3A,1B,2C,2S
6. செல்வி நா.மதுஷா 2B,3C,3S
7. செல்வி ச.துர்க்கா 5C,3S
8. செல்வன் தி.பிருந்தன் 4C,4S

9. சிறந்த மாணவர் தெரிவு

ந.பதுமிகா தரம் 11

சிறந்த மாணவர்களுக்கான பரிசினை ஸ்தாபகர் திரு.முருகேசர் முத்துத்தம்பி அவர்களின் ஞாபகர்த்தமாக வழங்கப்படுகின்றது.

10. அமரர் செல்லத்துரை இராசம்மா ஞாபகார்த்தமாக கற்றல் நிதியுதவி பெறும் வகுப்பு முதன்மை மாணவர்கள்

1. சி.தேனுஜன் தரம் -1
2. சி.அம்ஷவி தரம் -2
3. நி.நிதர்சனா தரம் -3
4. இ.கீர்த்தனா தரம் -4
5. சி.பிரணவி தரம் -5
6. ந.பானுஜன் தரம் -6
7. ஜெ.துவாரகன் தரம் -7
8. ச.அபிஸ்ணவி தரம் -8
9. பா.சோபினி தரம் -9
10. ஜெ.ஜெகதீஸ்வரன் தரம் -10
11. யே.ரம்சிகா தரம் -11